# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*வெளிநாட்டு அமைச்சர் அவர்களால் 2022, பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, சனவரி மாதம் 27 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***106 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 24.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், தடுத்துவைத்தற் கட்டளையொன்றின்கீழ் ஆளொருவரைத் தடுப்புக்காவலில் வைப்பதற்கான கூட்டுமொத்தக் காலப்பகுதியைப் பதினெட்டு மாதங்களிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்குக் குறைப்பதற்கென (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட அளவுக்குச் சந்தேக நபர் பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கென தடுத்துவைத்தற்கான இடத்துக்கு நீதிவான் செல்வதனை இயலச்செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 9அ மற்றும் 9ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அரசியலமைப்பின் 126 ஆம் அல்லது 140 ஆம் உறுப்புரையின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட பரிகாரமொன்றுக்காக விண்ணப்பிப்பதற்குத் தடுத்துவைக்கப்பட்டவர் ஒருவரை இயலச்செய்வதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், விளக்கமறியலில் இடப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஆளொருவருக்கான அணுக்கத்தைச் சட்டத்தரணியொருவர் கொண்டிருப்பதனை இயலச்செய்வதற்கும், அவ்வாறு விளக்கமறியலில் இடப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஆள் தனது உறவினர்களுடன் தொடர்புகொள்வதனை இயலச்செய்வதற்கும், முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அச்சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்று சேர்ப்பிக்கப்படுவதற்குமுன்னர் அத்தகைய ஆள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லையென்பதனை உறுதிப்படுத்துவதற்குச் சந்தேகநபரை ஒரு சட்ட-மருத்துவ அலுவலரின்முன்னர் நிறுத்துவதனை இயலச்செய்வதாகும்.

**வாசகம் 7 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை நீக்குவதாகும்.

**வாசகம் 8 :** இவ்வாசகம், வழக்குகளைத் துரிதமாகக் கையாள்வதனை உறுதிப்படுத்துவதற்கு நாளாந்த அடிப்படையில் விளக்கங்களை நடாத்துவதற்காக ஏற்பாடுசெய்வதற்கென முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

**வாசகம் 9 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன் 11 ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 10 :** இவ்வாசகம், விளக்கமறியலில் இடப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஆட்களுக்குப் பிணைவழங்குவதற்காக ஏற்பாடுசெய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 15ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 11 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 7 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 12*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அல்லது காரியத்துக்காக அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பைப் பொருட்படுத்தாது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் ஆக்கப்பட்டவொரு கட்டளையை அல்லது விடுக்கப்பட்டவொரு பணிப்பைக் கேள்விக்குட்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

***வாசகம் 13*** : இவ்வாசகம், "செய்தித்தாள்" மற்றும் "அச்சகம்" என்பவற்றின் வரைவிலக்கணங்களை அகற்றுவதற்கெனவும் "சித்திரவதை" என்னும் பதத்துக்காகப் புதியவொரு வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதற்கும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

## பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்)

ச.வ.- ஓ. 1/2022

### 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2**. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், ''பதினெட்டு மாத காலப்பகுதியினை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பன்னிரெண்டு மாதக் காலப்பகுதியினை'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 9அ மற்றும் 9ஆ என்னும் பிரிவுகளை உட்புகுத்துதல்*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன வென்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 9அ மற்றும் 9ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*''தடுத்து வைத்தற் கட்டளையின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதி நீதிவானுக்குச் சேர்ப்பிக்கப் படுதல் வேண்டும்*

9அ. (1) ஒன்பதாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று, அத்தகைய கட்டளை எவ்வாள் தொடர்பிலானதோ அவ்வாள் தடுத்துவைக்கப்பட்ட இடம் எந்த நீதிவானின் நீதிமுறைப் பிரிவினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவானுக்கு, 9ஆ என்னும் பிரிவின் நியதிகளின்படி அந்நீதிவான் அத்தகைய தடுத்துவைத்தற்கான இடத்துக்குச் செல்வதற்காக நியாயமானவொரு காலப்பகுதியினுள் கிடைக்கக் கூடியதாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒன்பதாம் பிரிவின்கீழ் எவரேனுமாள் தடுத்துவைக்கப்படுதலானது, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் நியதிகளின்படி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் அச்சட்டத்தின் நியதிகளின்படி தடுத்துவைத்தற்கான இடத்துக்குச் செல்வதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

தடுத்து வைத்தற்கான இடத்துக்குச் செல்வதற்கு நீதிவானுக்குள்ள கடமை

9ஆ. (1) பிரிவு 9அ வின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி தடுத்துவைத்தற் கட்டளையொன்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றைப் பெற்றுள்ள ஒவ்வொரு நீதிவானும் (இப்பிரிவில் ‘‘சந்தேக நபர்’’ எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சந்தேக நபர், 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயச் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட அளவுக்குப் பாதுகாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு, கட்டளை எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளின் தடுத்துவைத்தற்கான இடத்துக்குத் தடுத்துவைத்தற் காலப்பகுதியின்போது ஒவ்வொரு மாதத்திலும் ஆகக்குறைந்தது ஒருதடவையேனும் செல்வது அவரது கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, ஏதேனும் தடுத்துவைத்தற்கான இடத்துக்குச் செல்கின்ற நீதிவான்–

(அ) சந்தேக நபரை நேரடியாகப் பார்வையிடுதல் வேண்டுமென்பதுடன் அவரது நல்வாழ்வு, சேமநலன் மற்றும் அத்தகைய தடுத்துவைத்தற்கான இடத்தில் அவர்

எந்நிலைமைகளின்கீழ் வைத்திருக்கப் படுகின்றாரோ அந்நிலைமைகள் என்பன பற்றிக் கவனஞ் செலுத்துதலும் வேண்டும்;

(ஆ) அவரது அவதானிப்புகளையும் சந்தேக நபர் செய்யக்கூடிய ஏதேனும் முறைப் பாட்டையும் பதிதல் வேண்டும்.

(3) சந்தேக நபர் சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்டிருக்கலாமென நீதிவான் அபிப்பிராயப் படுமிடத்து, நீதிவான், மருத்துவப் பரிசோதனைக் காகச் சட்ட-மருத்துவ அலுவலரொருவரின் முன்னர் சந்தேக நபர் நிறுத்தப்படுதல் வேண்டுமென்றும் அத்தகைய சட்ட- மருத்துவ அலுவலரினால் நீதிவானுக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்றும் பணிக்கலாம்.

(4) சந்தேக நபர் சித்திரவதைக்கு உட்படுத்தப் பட்டுள்ளாரென அத்தகைய சட்ட-மருத்துவ அலுவலரின் அறிக்கை வெளிக்காட்டுமிடத்து, சந்தேக நபருக்கு அவசியமான மருத்துவச் சிகிச்சையை வழங்குவதற்கு நீதிவான் தோதான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(5) சித்திரவதையைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்படுகின்ற ஆளுக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதியை இயலச்செய்வதற் கெனச் சார்த்தப்பட்ட சித்திரவதை தொடர்பிலான புலனாய்வொன்றைத் தொடங்கும்படியும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியை நீதிவான் பணிக்கலாம்.”.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்கு பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

*"9 ஆம் பிரிவின் கீழான கட்டளை இறுதியான தாதல் வேண்டும்*

10. ஒன்பதாம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று இறுதியானதாதல் வேண்டுமென்பதுடன் அரசியலமைப்பின் 126 ஆம் அல்லது 140 ஆம் உறுப்புரையின் கீழான வழக்குநடவடிக்கைகளில் தவிர, எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் அல்லது ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.".

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 10அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:- *முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்*

*"விளக்கமறியலில் அல்லது தடுப்புக்காவலில் உள்ள ஆளொருவருக்கான அணுக்கத்தைச் சட்டதரணியொருவர் கொண்டிருத்தல் வேண்டும்*

10அ. (1) இச்சட்டத்தின்கீழ் விளக்கமறியலில் இடப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஆளொருவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணி ஒருவர், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அல்லது வேறு எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அத்தகைய ஆளுக்கான அணுக்கத்தையும் அத்தகைய ஆளின் சார்பில் முறையீடுகளைச் செய்வதற்கும் உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் விளக்கமறியலில் இடப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஆளொருவர், எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக, அவரது உறவினர்களுடன் தொடர்புகொள்வதற்கு உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(1அ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை எந்த ஆள் தொடர்பானதோ அந்த ஆள், அத்தகைய கட்டளை அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படுமுன்னர் மருத்துவப் பரிசோதனைக்காக ஒரு சட்ட - மருத்துவ அலுவலரின் முன்னர் நிறுத்தப்படுதலும் அத்தகைய ஆள் தொடர்பில் சட்ட-மருத்துவ அலுவலரினால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(1ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று, அக்கட்டளை எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளுக்கு, அத்தகைய ஆள் எந்த நீதிவானின் நீதிமுறைப் பிரிவில் வதிகின்றாரோ அந்த நீதிவானினால் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் உட்பிரிவு (1அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட சட்ட - மருத்துவ அலுவலரின் அறிக்கை, அத்தகைய ஆளுக்கு அத்தகைய கட்டளை சேர்ப்பிக்கப்படுமுன்னர் அத்தகைய ஆள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நீதிவான்முன்னர் காண்பிக்கப்படுதலும் வேண்டும்.

(1இ) உட்பிரிவு (1அ) வின்கீழ் சட்ட - மருத்துவ அலுவலரினால் வழங்கப்பட்ட அறிக்கை அத்தகைய ஆள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரென்பதை வெளிக்காட்டுமிடத்து, நீதிவான், அத்தகைய ஆளுக்கு அவசியமான மருத்துவச் சிகிச்சையை வழங்குவதற்கெனத் தோதான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(1ஈ) சித்திரவதையைப் புரிந்துள்ளவரெனச் சார்த்தப்படுகின்ற ஆளுக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதியை இயலச்செய்வதற்கெனச் சார்த்தப்

பட்ட சித்திரவதை தொடர்பிலான புலனாய்வொன்றைத் தொடங்கும்படியும் பொலிசுப் பரிசோதகர் தலைமை யதிபதியை நீதிவான் பணிக்கலாம்.".

(2) அதன் (3) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "பதினெட்டு மாதங்களுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பன்னிரெண்டு மாதங்களுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அதன் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும்:-

"(5) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று இறுதியானதாதல் வேண்டுமென்பதுடன் அரசியலமைப்பின் 126 ஆம் அல்லது 140 ஆம் உறுப்புரையின்கீழான வழக்குநடவடிக்கைகளில் தவிர, எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் அல்லது ஏதேனும் சட்ட நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை நீக்குதல்

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(3) இச்சட்டத்தின்கீழான ஒவ்வொரு விளக்கமும், நீதிமன்றத்தினால் பதியப்படவேண்டிய காரணங்களுக்காக, நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் விளக்கம் தொடங்கப்படுவதனை அல்லது தொடர்ந்து நடாத்தப்படுவதனைப் பின்போடுவதற்கு விதிவிலக்கான சூழ்நிலைகள் அனுமதித்தாலொழிய, நாளாந்த அடிப்படையில் நடாத்தப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவைத் திருத்துதல்*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவு, “19அ என்னும் பிரிவின்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “19 ஆம் பிரிவின்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 15ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 15ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*“விளக்கமறியலில் அல்லது தடுப்புக் காவலில் உள்ள ஆட்களுக்குப் பிணை வழங்குதல்*

15ஆ. இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் இடப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஆளொருவருக்கெதிரான விளக்கம் கைதுசெய்யப்பட்ட தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் முடிவுற்றபின்னர் தொடங்கியிராதிருப்பின், சந்தேகநபரினால் அல்லது அவரது சார்பில் சட்டத்தரணி ஒருவரினால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், மேன்முறையீட்டு நீதிமன்றம் அத்தகைய ஆளைப் பிணையில் விடுவிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், விளக்கம் முடிவுறும்வரை 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனுமாளை விளக்கமறியலில் இடுவதற்கான கட்டளையொன்றை ஆக்குவதிலிருந்து மேல் நீதிமன்றத்தைத் தடைசெய்தலாகாது:

ஆயின், மேலும், எந்தக் குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகர்வு முன்வைக்கப்பட்டு கோப்பிடப்பட்டுள்ளதோ அந்தக் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான விளக்கம் அத்தகைய கோப்பிடுதல் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் முடிவுற்றபின்னர் தொடங்காதுள்ளவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவரினால்

அல்லது அவரது சார்பில் சட்டத்தரணியொருவரினால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மேல் அத்தகைய ஆளைப் பிணையில் விடுவிப்பதனை மேல் நீதிமன்றம் கவனத்துட்கொள்ளலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"பிணை வழங்குதல் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றஞ் சாட்டப்பட்ட ஆட்களுக்கு ஏற்புடையன வாகா திருத்தல்*

19. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்கு ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும், அவரது குற்றத்தீர்ப்புக்கெதிராக அல்லது அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீட்டு மனுவொன்றை அவர் தாக்கல்செய்துள்ளார் என்பது எவ்வாறிருப்பினும், மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை விளக்கமறியலில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மேன்முறையீட்டு நீதிமன்றம், தகுதியானவையென மேன்முறையீட்டு நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, அத்தகைய எவரேனுமாளை விதிவிலக்கான சூழ்நிலைகளில் பிணையில் விடுவிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்கு பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"அலுவலர்கள் முதலியவர்களைப் பாதுகாத்தல்*

26. (1) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று அல்லது விடுக்கப்பட்ட பணிப்பொன்று, அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின்கீழான அல்லது 140 ஆம் உறுப்புரையின் கீழான வழக்குநடவடிக்கைகளில் கேள்விக்குட்படுத்தப் படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்பைப் பின்பற்றி அல்லது பின்பற்றுவதாகக் கருதி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக அல்லது காரியத்துக்காக எவரேனும் அலுவலருக்கெதிராக அல்லது ஆளுக்கெதிராகத் துடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''செய்தித்தாள்'' என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்குவதன்மூலமும்;

(2) "அச்சகம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக் கணத்தை நீக்குவதன்மூலமும்; அத்துடன்

(3) ''குறித்துரைக்கப்பட்ட ஆள்'' என்பதன் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"சித்திரவதை" என்பது, 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, சித்திரவதை மற்றும் வேறு கொடூர மான, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற் கெதிரான சமவாயச் சட்டத்தின்கீழ் அத்தகைய சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளை உடையதாதல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.